மின்னிதழ்
# தேசியம்
THESIYAM
www.thesiyamnews.com

Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com

மல… : 145 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஞாயிற்றுக்கிழமை 04.02.2024 | பக்கங்கள் 10



# இலங்கையின் சுதந்திர தின எதிர்ப்பு போராட்டத்துக்கு வலுச்சேர்ப்போம்!

பக்கம்–07

தமிழரசுக் கட்சியின் தலைவர் சிறீதரன் எம்.பி. அழைப்பு!

# ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமை சிங்களவர்களிடம் தாரை வார்க்கப்பட்ட தினம்!



வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!

பக்கம்–02

# தியாகி திருமலை நடராஜனும், கரிநாளான சுதந்திர தினமும்!




பக்கம்–03

## பெப்ரவரி 04 தமிழர் தேசத்தின் கறுப்பு நாள்!

யாழ் பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு!

பக்கம்–05

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
Whatsapp +94 76 567 3339
No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557
SCAN ME

# ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமை சிங்களவர்களிடம் தாரை வார்க்கப்பட்ட தினம்!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்

பெப்ரவரி 4 திகதி ஈழத் தமிழர்களை பொறுத்த வரை தங்களது சுயநிர்ணய உரிமையை பிரித்தானியர்கள் பறித்து சிங்களவர்களுக்கு தாரை வார்த்த தினமாகவே பார்க்கின்றனர் அத்துடன் தங்களின் சுதந்திரம் பறிபோன கரி நாளாக பிரகடனப்படுத்தியுள்ளனர்.

பிரித்தானிய காலணித்தும் இலங்கைக்கு வரும் போது இரண்டு தேசங்களில் சிங்களவரும் தமிழர்களும் தனித்தனியாக தங்களது சுயநிர்ணய உரிமையுடன் தன்னாட்சியை நடாத்தி கௌரவ மாக வாழ்ந்தனர் ஆனால் 1815 ஆண்டு கண்டி ராச்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றிய பின்னர் பல ராச்சியங்களாக இருந்த நாட்டை ஒற்றையாட்சி அரசியலமைப்பான கோல்புறுக் யாப்பை 1833 இல் நடைமுறைக்கு கொண்டு வந்து ஒற்றையாட்சி நாடாக பிரகடனப்படுத்தினர்.

கோல்புறுக் யாப்பில் இருந்து சோல்பரி அரசியல மைப்பு வரை ஒற்றையாட்சிக் கட்டமைப்பை வலுப்படுத்திய பிரித்தானியர் சுதந்திரம் என்ற



பெயரில் பல இன மக்கள் வாழும் நாட்டை தங்களு டைய பூகோள நலனுக்காக ஒற்றையாட்சி முறைக் குள் ஒரு இனத்திடம் ஆட்சியை ஒப்படைத்தமை ஏனைய இனங்கள் அடக்குமுறைக்கு உள்ளாவ தற்கு வழி கோலியது இதனால் தமது இறைமையை இழந்த இனமாக ஈழத் தமிழர்கள் மாறியதுடன் சுதந்திரத்தை பறி கொடுத்தவர்களாகவும் அவலப் படுகின்றனர் இதனால் தமிழர்களுக்கு பெப்ரவரி 4 சுதந்திர தினம் என்பது கரி நாளாகவே அமைந்து விட்டது.

# சாந்தனின் இலங்கை வருகை: உறுதியளித்த ரணில்!

சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ள அதிபர் உறுதியளித் துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அதிபருடனான நேற்றைய(3) சந்திப்பின் பின்னர் சிறீதரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், விடுதலை செய்யப்பட்ட சாந்தன் தற்போது உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார்.
அவரது வருகைக்காக அவருடைய தாயார் பலவருடங்களாக காத்துக்கொண்டிருப்பதோடு தனது இறுதிக் காலத்தில் மகன் தன்னுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்.
நானும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேச னும் நேற்றையதினம் (03) அதிபர் சந்தித்து சாந்தனை நாட்டிற்கு அழைத்து வருவது குறித்து பேசினோம்.

இந்நிலையில், அதிபர் நான் அதற்கான ஏற்பாடு களைச் செய்து தருவதாக கூறியுள்ளதோடு சாந்தன் தாயாரிடமிருந்து ஒரு கடிதமும், எங்களுடைய தரப்பிலிருந்து ஒரு வேண்டுகோள் கடிதமும் வழங்குமாறு கோரியுள்ளார்.

நாங்கள் நாளையதினம் அந்த கடிதங்களையும், சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் அதிபரிடம் வழங்குவோம். சாந்தனை விரைவில் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் செயல் வடிவில் செய்வோம்" என்றார்.





# தியாகி திருமலை நடராஜனும், கரிநாளான சுதந்திர தினமும்!




ஐங்கரன் விக்கினேஸ்வரா

இலங்கையின் 76வது சுதந்திர தினம் வடக்கு, கிழக்கில் கறுப்பு நாளாக பிரகடனம் செய்யப் பட்டுள்ள நிலையில் 04.02.1957 அன்று திருமலை யில் கறுப்புகொடி ஏற்றியவேளை சிங்கள படையால் கொல்லப்பட்ட தியாகி திருமலை நடராஜன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதனையும் நினைவு கூறவேண்டும்.

**பெப்ரவரி 4 - கறுப்பு நாள்:**

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் முழுவதும் 'கறுப்பு தினம்'ஆக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. பெப்ரவரி 4 ஆம் திகதி கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தப் படுவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன அறிவித்துள்ளன.

தமிழ் மக்களுக்கான உரிமைகள் மீறப்படுகின்றன. பூர்வீக இருப்பு கேள்விக்குரியாகியுள்ளது. அச்சுறுத் தல்கள் இன்னமும் தொடர்கின்றன. ஆட்சிகளும், ஆட்சியாளர்களும் மாறுகின்றார்கள். எனினும் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு என்பது இன்றுவரை முன்னேற்றகரமான வேலைத்திட்டங் களும் முன்னெடுக்கப்படவில்லை.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கான முன்னேற்றகரமான வேலைத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படாமல், அது வெறும் பேசுப்பொ ருளாக மாத்திரமே இருக்கின்றது. பெப்ரவரி நான்கினை வடக்கு, கிழக்கு தழுவிய கரிநாளாக பிரகடனப்படுத்துகின்றோம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித் துள்ளனர்.

அரசாங்கம் பல்வேறு புதிய சட்டங்கள் ஊடாக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களை தடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய குடியேற்றங்கள், நிலங்களை கைப்பற்றி விகாரைகளை அமைக்கும் செயற்பாடுகளாகள் என இவை தொடர்கின்றன.

ஆகவே தமிழர்களின் தீர்வு எட்டப்படும் வரை போராடியே ஆகவேண்டும் என்பதே வரலாற்று உண்மை. அரசியல் தீர்வு கிடைக்கும் வரை தமிழ் மக்கள் தொடர்ந்து போராட வேண்டும் என மாணவர் ஒன்றிய தலைவர் மேலும் வலியுறுத்தியுள்ளது.

**திருமலையில் 04.02.1957 கறுப்புகொடி:**

திருகோணமலையில் 1957ம் ஆண்டில் தமிழ் பேசும் மக்கள் பெப்ரவரி 4ந் திகதி சுதந்திர தினத்தைத் துக்கதினமாக அனுஸ்டிக்க முடிவு செய்தார்கள். அத்துடன் 1957ல் சிறிலங்கா சுதந்திரநாளை கரிநாளாக தமிழரசுக்கட்சியும் அறிவித்தது.

திருமலையில் 04.02.1957 அன்று கறுப்புகொடி ஏற்றியவேளை சிங்கள படையால் நடராஜன் இந் நாளிலேயே சுட்டுக்கொல்லப்பட்டார்.
தியாகி நடராஜன் ஆயுதம் தூக்கி போராடவில்லை. ஆனாலும் சுட்டுக் கொல்லப்பட்டார். அகிம்சை போராட்டம் வன்முறை மூலம் அடக்கப்பட்டதாலேயே தமிழர்கள் வேறு வழியின்றி ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

பெப் 4-ந் திகதி காலையில் பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் கறுப்புக் கொடிகளைப் பிடித்துக் கொண்டும் கறுப்புச் சின்னங்களை அணிந்து கொண்டும் திருகோணமலை மடத்தடி சந்தியி லிருந்து நகரசபை காரியாலயத்தை நாடி அமைதி யுடன் ஊர்வலமாகச் சென்றனர்.

இவ்வூர்வலத்தைத் திருமலை பிரதிநிதி திரு. என்.ஆர். இராஜவரோதயம், ஊர்காவற்றுறை பிரதிநிதி வி.ஏ.கந்தையா, கப்டன் ஏ.ஸி.கனகசிங்கம், டாக்டர் துரைநாயகம் ஆகியோர் முன்னின்று நடத்தினர் என சுதந்திரன் பத்திரிகை 10.02.1957 இல் தகவலை வெளியிட்டது.

அங்கு ஊர்வலம் நகரசபைக் காரியாலயத்தை அடைந்ததும் நகரசபை தலைவர் திரு.த.ஏகாம்பரம் அங்கு ஒரு கறுப்புக் கொடியை ஏற்றி வைத்து உணர்ச்சிகரமாக ஒரு சொற்பொழிவை நிகழ்த் தினார். பின்னர் அங்கு திரளாக சென்று திருமலை மணிக்கூண்டுக் கோபுரத்தின் மீதும் கறுப்புக்கொடி உயர்த்தினார்.

இதைத் தொடர்ந்து திருமலை காளிகோயில் முன்றலில் ஒரு பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் திரு. இராஜவரோதயம் தலைமை தாங்கி பேசினார்.

**தியாகியான திருமலை நடராஜன்:**

இந்த நேரத்தில் வெடியோசைகள் கிளம்பின. எங்கேயோ பட்டாசு கொளுத்தப்படுகிறதென்று ஆரம்பத்தில் மக்கள் எண்ணினார்கள். ஆனால்

தொடர்ச்சி 04 பக்கம்

# தியாகி திருமலை நடராஜனும், கரிநாளான சுதந்திர தினமும்!

நடராஜன் என்கிற இளைஞரின் மார்பில் குண்டு பாய்ந்ததினால் அவர் பதறிக் கதறிக்கொண்டு அடிசாய்ந்தார்.

துடிக்கத் துடிக்க அவர் உயிர் பிரிந்தது. திரு.வ. நடராஜா என்கிற மற்றொரு இளைஞர் படுகாயப் பட்டார். முதியவர் ஒருவரின் கண்களினூடாக குண்டு பாய்ந்துவிட்டது. இன்னொரு இளைஞருக்கு நெற்றியில் காயம்பட்டது. மற்றும் பலருக்கும் காயங்கள் ஏற்பட்டன. சன சமுத்திரம் அல்லோல கல்லோலப்பட்டது. எங்கும் குழப்பம். எங்கும் கலவரம். எங்கும் பயங்கரத் தத்தளிப்பு நிலவியது.

வெளியில் தலைவர்களும், மக்களும் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கையில், சிங்களவர்கள் திரண்டு மார்க்கெற் வாயில்களை மறைத்து நிற்க, சிங்களவர் ஒருவர் மார்க் கெற்றுக்குள் மறைந்து நின்று, மார்க்கெற் ஜன்னல் துவாரத்தின் மூலம் இரட்டைக் குழல் துப்பாக் கியினால் குருட்டுவாக்கில் கூட்டத்தை நோக்கி இரண்டு முறை சுட்டிருக்கிறார்.
ரவைகள் நாலாத்திசைகளிலும் பாய்ந்து, தமிழ் மக்களைப் பலிகொண்டன. கொடி காக்கும் பணியில் தியாகி நடராஜன் தன் இன்னுயிரை ஈழ மண் ணுக்காக ஈய்ந்தார்.

**ஒரு மைல் தூர இறுதி ஊர்வலம்:**

தியாகி நடராஜனின் புகழுடல் இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை கிளை கையேற்றது. திரு.நடராஜன் புகழுடல் திருமலைத் தமிழரசுக் கட்சியின் காரியாலயத்தில் சகல மரியாதைக ளுடனும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட் டிருந்தது.

5-ந் திகதி செவ்வாய்க்கிழமை (1957) பிற்பகல் இறுதி ஊர்வலம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் சுமார் ஒரு மைல் நீளத்திற்கு இந்த




ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். தெருநெடுகிலும் பெண்கள் கூடி நின்று கண்ணீர் வடித்தனர்.

திரு. நடராஜனின் புகழுடலை திருமலை நகரசபைத் தலைவர் திரு. த. ஏகாம்பரம், திருவாளர்கள் வி.ஏ. கந்தையா,
எம்.பி. என்.ஆர்.இராஜவரோதயம்
எம்.பி., எம். தாமோதரம்பிள்ளை, சட்டத்தரணி துரைநாயகம், கப்டன், ஏ.ஸி.கனகசிங்கம் ஆகியோர் கையேந்தித் தூக்கிச் சென்றனர்.

கந்தளாய் மயானத்தில் புகழுடல் நல்லடக்கம் செய்யப் பட்டது. புகழுடலை அடக்கம் செய்த இடத்தில் ஒரு ஞாபகார்த்த கட்டடத்தைக் கட்டி தமிழ் மொழியையும், கொடியையும் காக்க உயிர்நீத்த தியாகி நடராஜன் என்று பொறிக்க வேண்டும் என்று எல்லோராலும் அபிப்பிராயப் பட்டதனாலேயே தகனம் செய்யப் படாமல் அடக்கம் செய்யப்பட்டது என சுதந்திரன் பத்திரிகை இத் தகவலை வெளியிட்டது.

# நடிகர் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்த நாமல்.

புதிய 'தமிழக வெற்றி கழகம்' என அரசியல் கட்சி ஆரம்பித்துள்ள நடிகர் விஜய்க்கு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ வாழ்த்துத் தெரிவித் துள்ளார்.
நடிகர் விஜயின் அரசியல் பிரவேசத்திற்கும் அவர் ஆரம்பித்துள்ள புதிய அத்தியாயத்திற்கும் மன மார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதாக நாமல் ராஜபக்ஸ ஓ தளத்தில் பதிவிட்டுள்ளார்.





விளம்பர தொடர்புகளுக்கு
Mobile : +94 777 163990

# பெப்ரவரி 04 தமிழர் தேசத்தின் கறுப்பு நாள்! யாழ் பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு!

பிரித்தானிய காலனித்துவத்தின் பிடியிலிருந்து சிறிலங்கா, 04.02.1948 ஆம் ஆண்டு விடுதலை பெற்ற நாள் தமிழ்த் தேசிய இனம் திறந்தவெளி சிறையில் இடப்பட்ட நாள். ஒட்டுமொத்த நாட்டினுடைய இறைமை, ஆட்சியதிகாரம் அனைத்தும் தனித்தே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கைகளிலே ஒப்படைக்கப்பட்டமை என்பது தமிழினம் மீதான தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளிற்கே வழிகோலியது என்பதோடு, 2009 ஆண்டு இனப்படு கொலை எனும் கோரமுகமாய் வெளிப்பட்டதென்பதும் யாவரும் அறிந்ததொன்றே.

சிறிலங்காவின் சுதந்திரத்திற்கு முன்னர் இருந்தே தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பென்பது சிங்கள குடியேற் றத்திட்டங்கள், இராணுவமயமாக்கம் முதற்கொண்டு தொடங்கிய இனவழிப்புச் செயன்முறை, 2009 ஆண்டு ஈழப்போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தை சூறையாடுவதில் மேலும் தீவிரநிலை கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் பெப்ரவரி 04, 2024 ஐ கறுப்புநாளாக பிரகடனப்படுத்தி, பின்வரும் கோரிக்கை களை முன்வைத்து கறுப்புதினப் பேரணியினை முன்னெடுக்க அழைப்பு விடுக்கின்றோம்.

1. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதோடு, தமிழர் தாயகத்தின் மீதான திட்டமிட்ட சிங்கள பௌத்த குடியேற்றங்கள் உள்ளிட்ட ஆக்கிரமிப்புக்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். குறிப்பாக தற்போது கையறு நிலையில் உள்ள கிழக்கு மாகாணம் மீதான ஆக்கிரமிப்புக்கள் தாமதமே துமின்றி முடிவுக்கு கொண்டு வரப்படவும் வேண்டும்.

2. ஈழத்தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் வழிநடத்துவதற்கும் சுயநிர்ணய உரிமை உடையவர்களா வர் என்பதை ஏற்று ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3. தமிழ் மக்களிற்கான அரசியற்தீர்வு தொடர்பான முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டினை அடியொற்றியே முன்னெடுக்கப்பட வேண்டும். சிறிலங்கா ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குட்பட்ட பதின்மூன்றாம் திருத்தத்தினை முற்றாக நிராகரிக்கின்றோம்.

4. தமிழர் தாயகத்தில் முடிவற்றுத் தொடரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், இராணுவப் பிரசன்னம், சிங்கள - பௌத்தமயமாக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, தமிழ் அரசியற் கைதிகளின் விடு தலை போன்றவற்றிற்கான உரிய தீர்வுகள் தாமதமேது மின்றி வழங்கப்பட வேண்டும் என்பதோடு, ஆக்கிரமிப்புக்களை முன்னின்று நடாத்தும் அரச இயந்திரத்தையும் அதன் நிறுவனங்களையும் கண்டிக்கின்றோம்.

தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டு கடந்தும் சூழ்ந்துள்ள பேரினவாதத்தீயிலிருந்து தமிழர் தாயகத்தை காத்திடவும், தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்பிற்காகவும் எதிர்வரும் பெப்ரவரி 4, 2024 ஆம் நாள் கிளிநொச்சி இரணைமடு சந்தியிலிருந்து டிப்போச் சந்திவரை நடைபெறும் கரிநாள் பேரணியில் பங்குகொள்ள உணர்வுடனும் உரிமையுடனும் அழைத்து நிற்கின்றோம்.

# ஜனவரியில் வந்து குவிந்த சுற்றுலா பயணிகள் அமைச்சர் வெளியிட்ட தகவல்!

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில், 208,253 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

இது கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் (102545) 103 சதவீத வளர்ச்சியாகும்.

அண்மைக்காலமாக இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவது நாட்டின் வருமானத்தில் பாரிய அதிகரிப்பை ஏற்படுத்தும் என பொருளியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# சுதந்திர தினம் என்ற ஒன்று இல்லை! ஜே.வி.பியினர் திட்டவட்டம்!






சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் இனவாத மற்றும் மதவாத பிளவை ஏற்படுத்தி அரசியல் செய்வதாக மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

இவ்வாறாக நாளாந்தம் இனவாத மற்றும் மதவாத பிரச்சனைகளை எதிர்நோக்கும் இலங்கையில், சுதந்திரம் என்ற ஒன்று இல்லை என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஐ.பி.சி தமிழ் செய்திகளுக்கு தெரிவித்துள்ளார்.

கொழும்பு காலிமுகத்திடலில் சுதந்திரத் தினக் கொண்டாட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலேயே, அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது, பிரித்தானியர் களிடமிருந்து இலங்கை பொருளாதார சுதந்தி ரத்தை பெற்றுக் கொண்டாலும் முழுமையான அரசியல் - பொருளாதார சுதந்திரத்தை நாம் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை.

இலங்கையில் தற்போது சுதந்திரம் என்ற ஒன்று இல்லை. நாம் கொண்டாடுவதற்கு எதுவும் இல்லை.

இனவாதம் மற்றும் மதவாதத்துடன் தொடர்புடைய நெருக்கடிகளை இலங்கை நாளாந்தம் எதிர்நோக்கு கிறது. இந்த இனவாத மற்றும் மதவாத பிளவை ஏற்படுத்தியது எமது ஆட்சியாளர்கள்.

சுதந்திரமாக வாழக்கூடிய நிலை இங்கு இல்லை. இதனாலேயே, எதிர்கால சந்ததியினர் வெளிநாடு களுக்கு குடிபெயர்கிறார்கள். இன்று கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள இளைஞர்கள் வரிசையில் காத்திருக்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு மாத்திரமின்றி இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் கொண்டாட சுதந்திரம் என்ற ஒன்று இல்லை. தேசிய ஒற்றுமை இல்லை.

இந்த நிலையில், நாளைய தினம் நடைபெறவுள்ள சுதந்திர தினக் கொண்டாட்டம், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் வீண் செலவுகளின் வெளிப்பாடு. இலங்கை மக்களுக்கு சுதந்திரமும் இல்லை பொருளாதார சுதந்திரமும் இல்லை. அத்துடன், இலங்கையில் நாளைய தினம் நடைபெறவுள்ள சுதந்திர தினக் கொண்டாங்களில் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பங்கேற்காது.

எமக்கு இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும், சுதந்திரம் இல்லாத நாட்டில் மேற்கொள்ளப்படும் சுதந்திர தின கொண் டாட்டங்களில் நாம் பங்கேற்க மாட்டோம். எனக் குறிப்பிட்டுள்ளார்.





# தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்படத் தயார்: செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு!



தமிழரசுக் கட்சியையும் இணைத்துக் கொண்டு பொதுச் சின்னத்தில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு தாம் தயாராக உள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், தமிழ்க் கட்சிகள் ஐந்தும் ஒன்றிணைந்து ஓரணியில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். பொதுச் சின்னமான குத்துவிளக்கு சின்னத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

ஏற்கனவே, நாங்கள் தமிழரசுக் கட்சியின் தனிச் சின்னத்தில் பயணித்தோம். பல வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் பயணித்தோம்.

உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிட வேண்டும் என்று அவர்கள் வெளியில் சென்றதன் காரணமாக நாங்கள் ஒன்றாக நிற்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஒன்றிணைந்து செயற்படுகின்றோம்.

எங்களை பொறுத்தவரையில் நாங்கள் அனைவரும் பொதுச் சின்னம் ஒன்றில் பயணிக்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறீதரனின் கூற்றை நான் வரவேற்கின்றேன். ஒரு பொதுச் சின்னத்தில் நாங்கள் அனைவரும் அணி திரள்வோம்.

பொதுச் சின்னத்திற்கு வீட்டுச் சின்னம் மாற்றப்பட்டால் கூட எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. தனிப்பட்ட கட்சிக்குள் கூட்டாக இருப்பது நன்றாக அமையாது.

பொதுச் சின்னத்தில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எந்த விட்டுக் கொடுப்பையும் செய்ய நாங்கள் தயாராக உள்ளோம் என தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் சுதந்திர தின எதிர்ப்பு போராட்டத்துக்கு வலுச்சேர்ப்போம்!

## தமிழரசுக் கட்சியின் தலைவர் சிறீதரன் எம்.பி. அழைப்பு!

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதியை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கிளிநொச்சியில் ஒழுங் கமைக்கப்பட்டுள்ள எதிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள் ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"ஈழத்தமிழர்களின் போராட்ட வரலாற்றில், தியாகச் சாவைத் தழுவிக் கொண்ட முதல் மனிதன் என்னும் மரியாதைக்குரிய திரு மலை நடராஜன் அவர்கள், 1957.02.04 ஆம் திகதியன்று நடைபெற்ற இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பைத் தெரிவித்து, திருமலையில் ஏற்றப்பட்டிருந்த சிங்கக் கொடியை அகற்றி கறுப்புக்கொடியை ஏற்றிய மைக்காக சிங்களப்பொலிஸாரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டு 67 வருடங்கள் கடந் தும், இந்த நாட்டில் தமிழர்களின் இறைமை இன்றளவும் அங்கீகரிக்கப்படவில்லை.

தமது பூர்வீக மண்ணில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுவரும் தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பை நிலை நிறுத்த, அரசுக்கும் அரச கட்டமைப்புகளுக்கும் எதிராக எல்லாவழிகளிலும் போராட வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள எமது மக்களது அக உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும், எமது மக்களின் குரலாகவுமே யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் இந்த எதிர்ப்புப் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலா சைகள் நிறைவேற்றப்படாத வரை, ஈழத்தமி ழர்களை இறைமையுள்ள தேசிய இனமாக இலங்கைத் தேசம் அங்கீகரிக்காதவரை, இந்த நாட்டின் சுதந்திர தினம் தமிழ் மக்க ளின் கரி நாளே என்பதை மீள வலியுறுத்தும் இந்தப் போராட்டத்தில், அரசியற் கட்சி மற்றும் கொள்கை வேறுபாடுகள் எவை யுமற்று எமது இனத்தின் உரிமைக்கான ஏகோபித்த குரலாக எல்லோரும் இணைந்து, இதனை ஒரு மக்கள் திரட்சி மிக்க போராட்ட வடிமாக எழுச்சிபெறச் செய்ய வேண்டுமெனக் கேட்டு நிற்கிறேன்."-என்றுள்ளது.



# இலங்கை - தாய்லாந்துக்கிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்து!

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான பொருட்கள் வர்த்தகம், முதலீடு, சுங்க செயற்பாடுகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய சந்தை வாய்ப்புகளை மேம்படுத்தும், சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஜனாதிபதி செயலகத்தில் கைச்சாத்தி டப்பட்டது.

அத்துடன் இலங்கை - தாய்லாந்து விமான சேவைகளுக்கு இடையிலான தாராளமயப்படுத்தப் பட்ட புதிய இரு தரப்பு விமான சேவைகள் புரிந்து ணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையின் இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (GJRTI) மற்றும் தாய்லாந்தின் இரத்தினக்கல் ஆபரண நிறுவனம் (GIT) ஆகியவற்றுக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் இதன்போது கைச்சாத் திடப்பட்டுள்ளது.

தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் உள்ளிட்ட குழுவினர் இலங்கைக்கான விஜயத்தை மேற் கொண்டு இன்று இலங்கையை வந்தடைந்தார். இந்நிலையில், அவர்களுக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது.

இதையடுத்து, இலங்கை வந்துள்ள தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் மற்றும் அவரது குழுவினரை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி செயலகத்தில் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அழைப்பை ஏற்று நாட்டுக்கு வருகைதந்துள்ள தாய் லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின், இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின விழாவில் பிரதம அதிதியாக பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது.








# அறநெறி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு ஆலயங்கள் எழுச்சியடைய வேண்டும் தவத்திரு வேலன் சுவாமிகள்....!



தெல்லிமாநகர் மகாதனை கோணசீம திருவருள்மிகு ஸ்ரீ நரசிம்ம வைரவர் ஆலய கும்பாவிஷேகத்தில் கலந்துகொண்டு ஆசியுரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறிப்பாக வெள்ளிக்கிழமைகள் தோறும் ஆலயங்களில் பஜனை , கூட்டுப் பிரார்த்தனை என்பன நடைபெறுவதுடன் விசேட பூசைகள் இடம்பெற்று பிரசாதம் விசேசமாக வழங்கப்பட வேண்டும்.

இதேவேளை ஞாயிறு தினங்களில் மாணவர்கள் அறநெறி வகுப்புக்களுடன் தியான வகுப்புக்கள் , யோகா வகுப்புக்கள் மற்றும் கலை சார்ந்த வகுப்புக்களில் பங்கெடுக்க வேண்டும்.

நீண்ட காலமாக முயற்சி செய்த விடயம் தற்போது கைகூடியுள்ளது. யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புக்களை நிறுத்தி மாணவர்களை இத்துறைகளில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி கொண்டிருக்கின்றார்.

ஆகவே சிறு வயதிலிருந்து குழந்தைகளுக்கு அறநெறியையும், சைவப் பண்பாட்டையும் , இந்துக் கலாச்சாரத்தையும் வளர்ப்போமாக இருந்தால் நல்ல சமுதாயத்தை நாங்கள் உருவாக்க முடியும்.

இதன் மூலம் தமிழர்களின் நில இருப்பு தமிழ் மொழி மற்றும் சைவப் பண்பாட்டு வாழ்வியல் என்பவற்றைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள முடியும்.

எனவே இந்தப் பணியை ஆலயங்களும் பெற்றோர்களும் இணைந்து முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## அன்பான வாசகர்களுக்கு..!

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைகு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339



# காணி விற்பனைக்கு

## புத்தூர் மட்டுவில்

### பிரதான வீதியில்.

2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.

2 பரப்பு - 5,50,000/=

20 அடி பாதையுடன்.

- யாழ் மத்திய பொருளாதார சந்தைக்கு அருகாமையில் காணி அமைந்துள்ளது.
- ஆலையங்கள் மற்றும் வைத்தியசாலை, பாடசாலைகளும் அருகாமையில் உள்ளது.

- நன்னீர் நிலம்,
- மேட்டு நிலம்,
- மின்சார வசதியும் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு :

**076 10 98 504, 074 26 00 617**

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME